Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
"With God all things are possible"
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/50/2024**

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோமெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே!**

நமது மறைமாவட்டத்தின் மிக முக்கியமான ஆலோசனை மன்றமாகிய அருட்பணி பேரவையின் புதிய உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் பணிகளை பற்றி இச்சுற்றுமடல் வழியாக அறிவிக்க விரும்புகிறேன். அருட்பணி பேரவையானது மறைமாவட்ட ஆயரின் அதிகாரத்திற்கு உட்பட்டு இறைமக்களால் மறைமாவட்ட மறைபணியை சார்ந்த விசயங்களை குறித்து கலந்துரையாடவும் மதிப்பீடு செய்யவும் புதிய உக்திகளை கையாளவும் ஏற்படுத்தப்பட்ட ஆலோசனை மன்றம் ஆகும். அருட்பணிப்பேரவையின் தலைவர் மறைமாவட்ட ஆயர் ஆவார். ஆயரால் நியமிக்கப்படுகின்ற ஒரு பொது நிலையினர் இதன் செயலராகவும் செயல்படுவார். மறைவட்ட அருட்பணி பேரவையிலிருந்து தேந்தெடுக்கப்படுபவர்கள், ஆயரால் நியமிக்கப்படும் நபர்கள், பதவியினால் உறுப்பினர்களாக இருப்பவர்கள் ஆகியோர்கள் இணைந்து மறைமாவட்ட அருட்பணி பேரவையின் உறுப்பினர்களாக செயல்படுவர்.

நமது மறைமாவட்டத்தில் முதல் முதலாக **மறைவட்ட அருட்பணி பேரவை** இவ்வாண்டு முதல் உருவாக்கப்படுகின்றது. மறைவட்ட அருட்பணி பேரவை என்பது மறைமாவட்ட ஆயரின் அதிகாரத்திற்கு உட்பட்டு, மறைவட்ட அருட்தந்தையின் தலைமையில் மறைவட்ட மறைப்பணிகளை குறித்து ஆலோசிக்கவும், மறைமாவட்டம் ஆலோசனைக்கு உட்படுத்த கேட்டுக்கொள்ளும் விசயங்களை குறித்து கலந்துரையாடவும் மதிப்பீடு செய்யவும் மறைமாவட்ட அருட்பணி பேரவை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு செயல்படவும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பே மறைவட்ட அருட்பணிப் பேரவை. எனவே பங்களவில் தேந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மறைவட்ட அளவில் ஒன்று கூடி மறைவட்ட குருவின் தலைமையில் செயல்படுவர்.

மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்களின் தலைமையில் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் மற்றும் திரு. ஜாண் ஆசிரியர் ஆகியோர் மறைமாவட்ட அருட்பணி பேரவையின் உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளனர். பங்களவில் பங்குதந்தையின் தலைமையில் அருட்பணிபேரவை உறுப்பினர் தேர்வு நடைபெறும். ஒவ்வொரு பங்கிலிருந்தும் ஆறு பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதில் இருவர் பெண்களாக இருக்க வேண்டும். 150-க்கு மேற்பட்ட குடும்பங்களை கொண்ட பங்கிலிருந்து கூடுதலாக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவ்வாறு அவர்கள் ஏழு பேராக இருப்பர். இவர்களுள் மூன்று பேர் பெண்களாக இருக்க வேண்டும். 40 குடும்பங்களுக்கு கீழ் உள்ள பங்குகளில் வயது வரம்புக்கு ஏற்ப ஒருவர் என மூன்று பேர் தேர்ந்தெடுக்கபடுவர். இவர்களுள் ஒருவர் பெண் உறுப்பினராக இருக்க வேண்டும். பங்களவில் தேந்தெடுக்கப்பட்டோர் மறைவட்ட

அளவில் ஒன்று கூடுவர். இவர்கள் மறைவட்ட அருட்பணிபேரவையின் உறுப்பினர்கள் ஆவர். இவர்களிலிருந்து ஆறு பேர் மறைமாவட்ட அருட்பணி பேரவைக்காக தேர்ந்தெடுக்கப்படுவர்.

தொடர்ந்து வரும் நான்கு ஞாயிற்றுக் கிழமைகளில் ஏதேனும் ஒரு ஞாயிற்றுக் கிழமை பங்களவில் உறுப்பினர்களை தேர்வு செய்து **மார்ச் மாதம் 3-ம் தேதி உறுப்பினர்களின் பெயர் பட்டியல் மறைவட்ட முதன்மை குருக்களிடம் பங்குதந்தை ஒப்படைக்க வேண்டும்.** உறுப்பினர் தேர்வு படிவும் இச்சுற்றுமடலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

கடந்த அருட்பணிப் பேரவையில் உறுப்பினர்களாக இருந்து மறைமாவட்ட வளர்ச்சியில் பங்கேற்று அலோசனைகள் வழங்கிய ஒவ்வொருவருக்கும் மனமார்ந்த நன்றியை இத்தருணத்தில் தெரிவிக்கிறேன். நமது மறைமாவட்டதில் பல புதிய மறைத்தொண்டு பணிகள் இப்பேரவையின் கருத்துரையாடல்கள் மூலமாக நிறைவேறி உள்ளன என்பதை மிக்க மகிச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அருட்பணிபேரவை மறைமாவட்ட ஆயருக்கு ஆலோசனை வழங்கும் அமைப்பு ஆகையால், இதில் உறுப்பினராக தெரிந்தெடுக்கப்படுவோர் மறைமாவட்டத்தோடு இணைந்து அதன் வளர்ச்சிக்காக ஆலோசனை வழங்குபவராகவும், முழு மூச்சோடு செயல்படுபவர்களாகவும் இருக்க வேண்டும். மறைமாவட்டம் முன்னெடுக்கும் இறைபணிக்கு அருட்பணிபேரவை உறுப்பினர் என்னும் நிலையில் முழு ஒத்துழைப்பு அளிப்பவராக இருக்க வேண்டும். இறை இயேசுவின் படிப்பினைகளையும் விழுமியங்களையும் மனதில் கொண்டவர்களாய் இறைபணியில் இணைந்து ஈடுபடுவோம். இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
01.02.2024

**✝மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

இச்சுற்றுமடலை 04.02.2024, ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகள் மற்றும் சிற்றாலயங்களில் திருபலிக்கு பிறகு வாசிக்க வேண்டும்.